# குஷ்பு மரைக்காயர்

அந்த வேலம்பட்டு கிராமத்தின் தார்ச்சாலையை ஒட்டிய செம்மண் பாதையில் தொடர்ந்தால், கூரை வேய்ந்த ஒரு கடை, பெட்டிக்கடை என்றோ, மளிகைக் கடை சொல்ல முடியாத அளவுக்கு ஒரு கடை தென்படும்.அதுதான் குஷ்பு மரைக்காயரின் கடை. கிராமத்தின் அவசரத் தேவைகளைத் தீர்த்து வைக்கும் சமய சஞ்சீவி அவர். சிகரெட்டிலிருந்து சில்லரை மளிகை சாமான் வரை அங்கு கிடைக்கும். அவசரத் தேவைக்கு சாரிடான் குரோசின் மாத்திரைகளும் கிடைக்கும்.

ஊருக்குள் வருபவர்கள் யார் வீட்டுக்கு வழி கேட்டாலும், தெளிவாகவும் அன்பாகவும் பதில் சொல்வார். எப்போதும் புன்னகை தவழ்ந்து கொண்டிருக்கும் அந்த முகத்தில் ஒழுங்கு செய்யப் பட்ட தாடி இருக்கும். கொஞ்சம் தடித்த நடுத்தர வயது உருவம். எப்போதும் லுங்கியுடன் தான் இருப்பார். கணுக்காலுக்குச் சற்று மேலே தூக்கிக் கொண்டிருக்கும் லுங்கியை தடிப்பான பச்சைநிற பெல்ட் பிடித்துக் கொண்டிருக்கும்.

அவ்வூரின் மேற்கு புறத்திலிருக்கும் சிவன் கோவிலின் தெற்கு வீதியில் தெற்கு பார்த்த ஓட்டு வீடுகளில் ஒன்றுதான் குஷ்பு மரைக்காயருடையது. கிழக்கிலிருந்து சென்றால், இரண்டாவதாகவும், மேற்கிலிருந்து வந்தால் ஐந்தாவதாகவும் இருக்கும். வீட்டின் முன் ஒரு வேப்ப மரம் வாசல் முழுவதற்கும் நிழல் பரப்பியவாறு இருக்கும். இரவு நேரங்களில், உணவுக்குப் பின் சுருட்டு புகைத்துக் கொண்டு, சாய்வு நாற்காலியில்

அங்குதான் அமர்ந்து இருப்பார் குஷ்பு மரைக்காயர். ஊரடங்கியபின் உறங்கப் போவது தான் அவரது வழக்கம். வீட்டுத் திண்ணையில்தான் படுப்பார். அதிகாலை ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து விடுவார். ஊரின் வடமேற்கில் அவருக்கு கொஞ்சம் விளை நிலமிருந்தது. அந்த விளைச்சல் நெல் அவரது வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்தது. வெள்ளாமை இருக்கிறதோ இல்லையோ, வயல்பக்கம் ஒரு சுற்று சுற்றிவிட்டு வந்துதான் குளிக்கப் போவார். அந்தக் கோயிலின் திருக்குளத்தில் குளிப்பதுதான் அவரது வழக்கம்.



ஏழு மணிக்கெல்லாம் கடை திறந்து விடுவார். இரவு 12 மணியானாலும் அவசரத் தேவைக்கு கடை திறந்து சாமான்கள் கொடுக்கும் தயாள குணம் அவருடையது.

கிராமந்தோறும் வங்கிகள் தொடங்கப் பட்டபோது, இந்த வேலம்பட்டு கிராமத்தில், தொடங்கப் பட்ட வங்கியில் உதவியாளனாக, வந்து சேர்ந்தவன் நான். மரைக்காயர் வீட்டுத் திருப்பத்தில் தான் எங்கள் வங்கி. கீழ வீதி தொடக்கத்தில். என்னையும் சேர்த்து மொத்தம் நான்கு பேர். நான் வேலம்பட்டு கிராமத்தில் நுழைந்த போது, எனக்கும் வழிகாட்டியவர் இந்த குஷ்பு மரைக்காயர்தான். வங்கியில் ஒரு சேமிப்புக் கணக்குத் தொடங்கும்படி எவ்வளவோ வற்புறுத்திப் பார்த்திருக் கிறேன். “எனக்கெதுக்கு தம்பி இதெல்லாம்!” என புன்முறுவலுடன் மறுத்து விடுவார்.

அவர் வீட்டுக்குப் பின்புறம் இருக்கும் கிணற்றிலிருந்துதான் எங்கள் வங்கிக்கு தண்ணீர் கொண்டு வருவோம்.

குஷ்பு மரைக்காயருடைய பிள்ளைகள் இருவரும் பக்கத்து டவுனில் உள்ள பள்ளியிலும் கல்லூரியிலும் படித்து வருகிறார்கள். நான் வங்கியிலுள்ள அறையிலேயே தங்கி யுள்ளதால், இரவு நேரங்களில், அவருடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு வருவது எனது வழக்கம்.

எனக்கும் இந்த குஷ்பு மரைக்காயர் என்ற பெயர் வியப்பை அளித்தது. உருவத்தைப் பார்த்தோ அல்லது எதற்காகவோ இப்படியொரு பட்டைப் பெயர் கொடுத்து விட்டார்கள் என எண்ணினேன். எனது துடிப்பும் இளமையும் அவரையேக் கேட்டு விடச் செய்தது. அதற்கும் ஒரு புன்னகைதான் பதிலாய். அப்புறம் ஒருநாள் அவரே சிரித்துக் கொண்டு சொன்னார், எனது பெயர் குஸ்புதீன் மரைக்காயர். குஸ்புதீன், குஸ்புவாகி பின்னர் குஷ்பு வான கதை எனக்கும் புரிந்தது.

தீபாவளிக்கு ஒருவாரம் லீவு போட்டுவிட்டு ஊருக்குப் போன நான் நேற்றிரவு திரும்பிய போது, மரைக்காயர் வீட்டு வேப்பமரம் காற்றில் அசையாமல் சோகத்துடன் காட்சி அளித்தது. வீட்டுத் திண்ணையும் வெறிச்சோடி கிடக்க, சாய்வு நாற்காலியும் இல்லாமற் போக, என் நெஞ்சுக்குழியில் ஏதோ அடைத்தது. அவரது பக்கத்து வீட்டுப் பையன் ஓடி வந்து சேதி சொன்னான். இது காலன் எழுதிய கவிதை என்று நினைத்துக் கொண்டேன். கொஞ்சம் நிலைகுலைந்து போனேன். ஒரு வழிகாட்டி மரம் சாய்ந்துவிட்டது. இன்னொன்று புதிதாய் எப்போது வருமோ?! - **கவிவளவன்**. (1996)

(நன்றி: முல்லைச் சரம்—திங்களிதழ்)